என்கிற ஒரு செய்தியை எடுத்துச் சொன்னார். எப்போது எடுத்ததைச் சொல்கிறார் என்றால், இதே அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாக்கப்பட்ட மார்ச் 25ந் தேதிக்குப் பின்னர், மார்ச் 29ந் தேதி அன்றைய எதிர்க்கட்சிகளாக இருந்த அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம் மற்றும் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த ஒரு கால கட்டத்தில் அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளாமல், அன்றைய ஆளுகிற கட்சிக்கு ஆதரவாக இருந்த திரு. லத்தீப் அவர்கள் கொடுத்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டதைச் சொல்கிறார்.

இப்படியொரு தவறான நடைமுறையை இங்கே முன்னுதாரணமாக எடுத்து வைத்துக்கொண்டு, ஏன் என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் அதைப்போல் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கிறார்கள் என்று சொன்னால், தவறான முன்னுதாரணத்தை திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர்கள் ஏற்றுக்கொண்டு, தலையில் வைத்துக்கொண்டு ஆடலாமே தவிர, இந்தப் பேரவையினுடைய இந்தக் கண்ணியம் மிக்க பொறுப்பிலே இருக்கின்ற நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தின் போது இடையிடையே பேசிய திரு. பழனிசாமியினுடைய பேச்சு, திரு. குமாரதாசினுடைய பேச்சு மற்றும் திரு. பண்ருட்டி இராமச்சந்திரனுடைய பேச்சு அனைத்தும் அவைக் குறிப்பிலே யிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) திரு. இளம்வழுதிக்கும் அனுமதியில்லை. அவர் பேசிய பேச்சு அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

5. ஒழுங்குப் பிரச்சினை.

ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகளை உறுப்பினர்கள் கொடுக்க வேண்டிய காலம் குறித்து.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். இதுவரை நடந்ததைச் சம்பந்தப்படுத்திப் பேசவில்லை. பொதுவாக ஒரு விதி. செகரட்டரியிடமோ அல்லது ஸ்பீக்கரிடமோ அட்ஜர்ன்மெண்ட் மோஷன்-ஐப் பற்றி அரை மணி நேரத்திற்கு முன்னால் கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. அதைத் தான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆனால் கொடுத்ததே சரியாக 9 மணிக்குக் கொடுத்திருக்கிறார்கள். 9-30 மணிக்கு அவை துவங்கியது ....

1992 மார்ச் 9]

திரு. பி. வி. இராஜேந்திரன் : செக்ரட்டரி என்றால் 1 மணி நேரம். ஸ்பீக்கர் என்றால் அரை மணி என்கிற மாதிரி சொல்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுவாக, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறபோது, செயலகத்தில் கொடுப்பதாக இருந்தால், ஒரு மணி நேரத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. பேரவைத் தலைவரிடமோ, செயலாளரிடமோ கொடுப்பதாக இருந்தால், அரை மணி நேரத்திற்கு முன்னர் கொடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவதைப்போல, தமிழில் சொற்கள் இருப்பதில், 'இரண்டும் சேர்ந்து' என்பது போல் இருக்கிறது.

முற்பகல் 11-00

6. வரவு—செலவுத் திட்டம், 1992-93, பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். திரு. குமரி அனந்தன்.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இரண்டு மணி நேரம் 24 நிமிடங்கள் இங்கே தளர்வற்று படித்தக் காட்சியினை நாம் கண்டோம். அப்போதும் நான் அதனை வரிக்கு வரி பார்த்துக் கொண்டிருந்த காரணத்தினாலும், அவருடைய நிதிநிலை அறிக்கையிலே அக்கறையைக் காட்டுகின்ற காரணத்தினாலும் ஒவ்வொன்றைப் பற்றியும் சில கருத்துக்களை இங்கே சொல்லுகின்ற வாய்ப்பைத் தந்த உங்களுக்கும் எம்மவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலிலே இது ஒரு துணிச்சலான வரவு—செலவுத் திட்டம். பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலே ஒரு வரவு-செலவுத் திட்டத்தை இங்கே தயாரித்துத் தருகின்ற போது, அவர்கள் கொடுத்திருக்கிற கருத்துக்களையெல்லாம் பார்க்கின்றபோது இது ஒரு துணிச்சலான வரவு—செலவுத் திட்டம் என்றே நான் சொல்ல வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது